[18th March 1959

Sri V. K. KOTHANDARAMAN : மின்சார ஊழியர்கள் தங்களுடைய உரிமைக்காக வேண்டி கிளர்ச்சி செய்த நேரத்திலே, பல வருஷங்களாக வேலை செய்த ஊழியர்கள் என்ன காரணத்திற்காக நீக்கப்பட்டார்களோ தெரியவில்லை. ஆனால் அதே நேரத்தில் புதிய ஆட்கள் எடுக்கப்பட்டது உண்மையா ? மின்சார போர்டு அந்த நேரத்தில் ட்ரான்ஸ்பர் யார் யாருக்குச் செய்திருந்ததோ அதெல்லாம் எப்படிக் கான்சல் செய்யப்பட்டதோ அதுபோன்று இந்தத் தற்கால ஊழியர்களைப் பொறுத்தும் நீக்கப்பட்டவர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்களா ?

The Hon. Sri V. RAMAIAH : கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன கிளர்ச்சி காலத்தில் ஏதோ மின்சார போர்டு நடவடிக்கை எடுத்ததாகவும் அவர்களுக்குத் திரும்ப பரிகாரம் காணப்பட்டு விட்டதா என்ற கேள்விக்கு, நிச்சயமாக எல்லாப் பிரச்னைகளும் சமூகமாகத் தீர்க்கப்பட்டு இப்பொழுது எந்தவிதமான கிளர்ச்சி, கஷ்டம் எதுவும் இல்லாமல் மின்சார போர்டு தன்னுடைய கடமையைச் செய்துகொண்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Sri M. JAGANNATHAN : Sir, may I know for what length of time these retrenched workers were in service?

The Hon. Sri V. RAMAIAH : A separate question may be put, Sir.

Goshalas

* 864 *Q.*—Sri T. S. RAMASWAMY PILLAI (on behalf of Sri K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of "Goshalas" in the State and the places where they are;

(*b*) the number of private Goshalas;

(*c*) the number of animals on their rolls;

(*d*) whether private Goshalas are receiving grants; and

(*e*) the contribution from the Central Government?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) *to* (*e*) A statement[a] is placed on the table of the House.

* 865 *Q.*—Sri R. SRINIVASA IYER (on behalf of Sri V. SANKARAN) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether it is a fact that the Gosamvardhana Council of the Central Government had sent a scheme to the Madras Government to open Gosadans;

(*b*) if so, how many have been opened by this Government till now; and

(*c*) if not the reasons for the same?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) No gosadan has been opened till now by the Government.

---

[a] Printed as Appendix III on pages 649 to 650 infra.

18th March 1959]

(c) It was considered that it was not economically or scientifically sound to maintain concentration camps for old and useless animals. However the Government would prefer to start and aid salvage farms for useful but dry cattle.

Sri K. APPAVOO PILLAI : ஹோசூர் கால்நடைப் பண்ணையானது மிகவும் பெரியது. சீதோஷ்ண ஸ்திதியும் அனுகூலமாக இருக்கிறது. அதன் காரணமாக, இப்பொழுது அங்கிருக்கும் கால்நடைப் பண்ணையில் இன்னும் அதிகமான பசுக்களை வைத்து, பண்ணையைப் பெரியதாக 'expand' செய்ய சர்க்காருக்கு ஏதாவது உத்தேசம் இருக்கிறதா?

The. Hon. Sri M. BHAKTAVATSALAM : இப்பொழுது அதிகப் பரப்புள்ள நிலம் அங்கே இருக்கிறது என்றாலும், அங்கு இப்பொழுது இருக்கும் மாடுகளுக்கே அது போதவில்லை. அதிகமான மாடுகளை வைத்தால் சீராகக் கவனிக்க முடியவில்லை, என்பதற்காக காங்கயம் மாடுகளெல்லாம் இராமநாதபுரத்தில் தொடங்கப்பட்டிருக்கும் மாட்டுப் பண்ணைக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. ஆகையால், எண்ணிக்கையை அதிகப்படுத்திக்கொண்டு போவதில் பயன் இல்லை.

Text-books

* 866 *Q.*—Sri N. K. PALANISAMI (on behalf of Sri M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the proposals for publishing the text-books by the Government from 1961–62 have been finalized?

The Hon. Sri C. SUBRAMANIAM : No, Sir.

Afforestation

* 867 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any scheme for the regeneration and afforestation in the forests; and

(b) if so, the details thereof?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) Regeneration and afforestation works are undertaken both under the prescriptions of working plans and on a large scale under the Second Five-Year Plan.

(b) A statement is placed on the table of the House showing the details of the regeneration and afforestation schemes undertaken by the Forest Department in the State.

Sri N. K. PALANISAMI : "அபோரெஸ்டேஷன் ஸ்கீம்" இலே எக்ஸ்-பஞ்சாயத்து அல்லது எக்ஸ்-ஜமீன்களுக்குச் சேர்ந்த காடுகளில் விறகு உண்டாக்கக்கூடிய மரங்கள்தான் வைக்கப்படும் என்று தெரிகிறது. ஏன் தேக்கு போன்றவைகளை வைக்கத் திட்டம் இல்லை?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நேற்று ஒரு கேள்விக்கு நான் பதில் சொன்னதை கனம் அங்கத்தினர் கேட்கவில்லை என்று நினைக்கிறேன். கண்டமநாயக்கன் ஜமீன் மதுரை ஜில்லாவில் இருக்கிறது. அது காடு வளர்ப்புத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் ஏராளமான தேக்கு வைக்க வசதி இருக்கிறது. அங்கு ஆயிரக் கணக்கான ஏக்கராக்களில் தேக்கு வைப்பதற்கு இப்பொழுது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

---

a Printed as Appendix IV on pages 650 to 651 infra.